# காலை வழிபாட்டுக் கூட்ட செயல்பாடுகள்

**தமிழ் வருடம் விகாரி ஆண்டு, மாசி மாதம் 22ஆம் நாள்**

**2020ஆம் ஆண்டு மார்ச் 06 ஆம் தேதி, வெள்ளிக்கிழமை**

குறள்:397

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு.

குறள் விளக்கம்:

கற்றவனுக்கு தன் நாடும் ஊரும் போல வேறு எதுவாயினும் நாடாகும், ஊராகும் ஆகையால் ஒருவன் சாகும் வரையில் கல்லாமல் காலங்கழிப்பது ஏன்?.

## பொன்மொழி

இவ்வுலக வாழ்க்கையில் சம்பாதித்துக் கொள்ள வேண்டிய குணங்களில் மிக மிக உயர்ந்தது பொறுமை.

## பழமொழி

*A constant guest is never welcome*

விருந்தும் மருந்தும் மூன்று நாளைக்கு

## பொதுஅறிவு வினா விடை

- தமிழ்நாட்டில் எழுத்தறிவு சதவீதம் – 73.5%
- தமிழ்நாட்டில் மஞ்சள் அதிகமாக உற்பத்தி செய்யும் மாவட்டம் - ஈரோடு

## இரண்டொழுக்க உறுதிமொழி

1. **ஒழுக்கமே என்னுடைய முதல் கற்றல் பணி என்பதை நான் அறிவேன். எனவே எந்நாளும் ஒழுக்கத்தைக் கடைபிடிப்பேன்.**
2. **யாருக்கும், எப்போதும் துன்பம் விளைவிக்க மாட்டேன். எல்லோரிடத்திலும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.**

*Abbreviations*

- C.A. - Chartered Accountant - பட்டய கணக்காளர்
- CIA - Central Intelligence Agency - மத்திய புலனாய்வு முகமை

## இன்றைய செய்திகள்

- கொரோனா வைரஸ் இறைச்சி உணவுகள் மூலம் பரவாது, எனவே பொதுமக்கள் பீதியடைய வேண்டாம் என மத்திய மந்திரி கிரிராஜ் சிங் தெரிவித்துள்ளார்.
- கொரானா வைரஸ் காரணமாக பிரதமர் மோடியின் பிரசல்ஸ் பயணம் ரத்து செய்துள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- நாட்டின் பாதுகாப்பை வலுப்படுத்த செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்திலான ஆளில்லா குட்டி விமானத்தை சென்னை ஐ.ஐ.டி. மாணவர் கண்டுபிடித்து சாதனை படைத்துள்ளார்.
- அறிவுத்திறன் மிக்க மாணவர்களை உருவாக்க அ.தி.மு.க. அரசு தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்று எடப்பாடி பழனிசாமி பேசினார்.
- பிளஸ்-2 ஆங்கிலத்தேர்வு சற்று கடினமாக இருந்ததாக மாணவ-மாணவிகள் தெரிவித்தனர்.
- தமிழக அரசின் நடவடிக்கையால் உயர் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று முதலமைச்சர் பழனிசாமி கூறினார்.
- நாமக்கல்லில், 338 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமையவுள்ள மருத்துவ கல்லூரிக்கு, முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி இன்று அடிக்கல் நாட்டுகிறார்.